# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC.844/2022 | Date: 14.08.2025 |
| Deposition of Witness for | : | பு.சா.1 | |
| Name | : | **பரத்குமரன்** | |

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**குறுக்கு விசாரணை** :-

1) நான் மெடிக்கல் ஷாப் வைத்தும், விவசாயமும் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது மெடிக்கல் கடைக்கு வரும் வகையில் சுமார் 4-5 வருடங்களாக தெரியும். நான் மேற்சொன்ன தொழில் இல்லாமல் கடன் வட்டிக்கு கொடுக்கும் தொழில் செய்து வருகிறேனோ என்றால் இல்லை. எதிரிக்கு நான் எங்கு வைத்து கடன் கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். அப்போது யார் யார் இருந்தார்கள் என்றால் எதிரி மட்டும் தான் இருந்தார். கடன் கொடுத்த அன்றே எதிரி காசோலையை கொடுத்துவிட்டாரா என்றால் ஆமாம்.

2) காசோலையை எதிரி என் முன்னிலையில் நிரப்பினாரா என்றால் கையொப்பம் மட்டும் என் முன்னிலையில் செய்தார், மற்ற விவரங்களை யார் பூர்த்தி செய்தது என்று எனக்கு தெரியாது. எதிரி கடனை எத்தனை மாதத்தில் திருப்பி செலுத்துவதாக சொன்னார் என்றால் 02 மாதத்தில் திருப்பி செலுத்துவதாக சொன்னார். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி 02 மாதத்தில் திருப்பி செலுத்துவதாக சொன்னார் என குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

3) விஜயகுமார், என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் செந்தூர் முருகன் என்ற பெயரில் ஈரோடு பஸ் ஸ்டேண்ட் அருகே மெடிக்கல் வைத்து

தொழில் செய்கிறேன். அங்கே எதிரி மருந்து வாங்க வரும் வகையில் தான் எனக்கு எதிரி பழக்கம் என்றால் சரிதான். எதிரி மெடிக்கல் ஷாப் வரும் வகையில் எனக்கு பழக்கம் என நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விஜயகுமார் எனது நண்பர் என்பதால் எதிரி விஜயகுமாரிடம் கொடுத்த காசோலையை பெற்று நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4) நான் எதிரிக்கு கொடுத்த ரூ.2,50,000/-ற்கு வட்டி ஏதேனும் கேட்டேனா என்றால் இல்லை, கைமாற்று கடனாக கொடுத்தேன். நான் எதிரிக்கு கடனே கொடுக்கவில்லை என்றும், அப்படி கொடுத்திருந்தால் வட்டி ஏதேனும் கேட்டிருப்பேன் என்றும், அதனால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எதிரியின் முகவரி, அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரியுமா என்றால் தெரியாது.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/--Bharathkumaran